بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

பிப்ரவரி 14

# காமக்களியாட்டத்தின் மறு பெயர் காதலர் தினம்

எல்லா உயிரினங்களும் ஆண், பெண் ஜோடிகளாகப் படைக்கப்பட்டு ஒன்றை ஒன்று ஈர்க்கும் வகையில் படைக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஈர்ப்பின் காரணமாகத் தான் அனைத்து உயிரினங்களும் பல்கிப் பெருக முடிகின்றது.

இதில் மனிதர்களும் விதி விலக்கல்ல.

ஆண்களுக்குப் பெண்கள் தேவை; பெண்களுக்கு ஆண்கள் தேவை என்பதை அனைவரும் அறிந்து வைத்துள்ளோம்.

ஒரு ஆணுக்கு ஒரு பெண் மீது ஏற்படும் ஈர்ப்பும், ஒரு பெண்ணுக்கு ஆண் மீது ஏற்படும் ஈர்ப்பும் காதல் என்றால் அது ஏற்கக் கூடியது தான். ஈர்ப்பு இல்லாத துணையுடன் வாழ முடியாது என்பதிலும் சந்தேகம் இல்லை.

ஆனால் காதலுக்கு இதுதான் இன்றைக்கு பொருளாக உள்ளதா என்றால் இல்லை என்பது தான் இதற்கான பதில்.

ஒரு உணவை, ஒரு உடையை, அல்லது ஏதேனும் ஒரு பொருளை நாம் விரும்புகிறோம். விருப்பமாக இருக்கும் வரை இதில் பிரச்சனை இல்லை. விருப்பம் ஒருவனுக்கு வெறியாக மாறினால் அவனை நாம் மன நோயாளியாகத் தான் பார்ப்போம்.

ஒருவனுக்கு பிரியாணியின் மீது ஆசை வருகிறது. ஆனால் பிரியாணி கிடைக்கவில்லை. சந்தையில் கிடைக்கிறது; அதை வாங்கச் சக்தியில்லை என்றால் அவன் என்ன செய்வான்? ஆசை ஒரு பக்கம் இருந்தாலும் அதை ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டு எது கிடைக்கிறதோ? எதை வாங்க சக்தி இருக்கிறதோ அதை வாங்கிச் சாப்பிடுவான். இது தான் நார்மலான மனிதனின் நிலை.

பிரியாணிதான் வேண்டும்; இல்லாவிட்டால் எதையும் சாப்பிட மாட்டேன் என்று பட்டினி கிடந்தால் அவன் நிச்சயம் மன நோயாளியாகத் தான் இருப்பான்.

குறிப்பிட்ட மாடல் உடை மீது ஆசை ஏற்படுகிறது. அந்த உடை அவனால் வாங்க முடியாத விலையாக இருக்கிறது. அல்லது அந்த உடை கிடைக்கவில்லை. நார்மலான மனிதன் இப்போது என்ன செய்வான்? தனது சக்திக்கு எது கிடைக்கிறதோ அதை வாங்கி அணிந்து கொள்வான்.

அதெல்லாம் முடியாது; அந்த ஆடை தான் வேண்டும். எப்போது வசதி வருமோ அல்லது எப்போது சந்தையில் கிடைக்குமோ அது வரை நான் நிர்வாணமாக இருப்பேன் என்று ஒருவன் முடிவு செய்தால் அவன் யார்? அவன் பைத்தியக்காரனாகத் தான் இருப்பான்.

எல்லா விருப்பங்களுக்கும் இது தான் அளவு கோல்.

ஒரு ஆண் ஒரு பெண்ணை விரும்பினாலும் ஒரு பெண் ஒரு ஆணை விரும்பினாலும் இந்த அளவு கோலில் அடங்கினால் தான் அவன்/அவள் சாதாரண மனிதனாக இருப்பான். இந்த எல்லையைக் கடந்தால் அவன் பைத்தியக்காரனே தவிர சராசரி மனிதன் அல்ல.

ஒரு பெண்ணை ஒரு ஆண் விரும்புகிறான். ஆனால் அந்தப் பெண் அவனை விரும்பவில்லை. அதாவது அவன் விரும்பியது அவனுக்குக் கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம்.

இவன் பைத்தியமாக இல்லாவிட்டால் என்ன செய்ய வேண்டும்? தான் விரும்பியது கிடைக்கவில்லை என்பதால் அதை ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டு அவனை விரும்பக் கூடிய ஒரு பெண்ணைத் தேர்வு செய்து வாழ்க்கை நடத்தினால் அவன் சராசரி மனிதனாவான்.

அவள் தான் வேண்டும்; அவளைத் தவிர வேறு எவளும் வேண்டாம் என்ற அளவுக்கு முற்றி விட்டால் அது காதல் இல்லை. மனநோயாகும்.

ஆனால் ஊடக நாதாரிகள் இதைத் தான் காதல் என்று சித்தரிக்கிறார்கள். வரலாற்றில் இப்படி நடந்த பைத்தியங்களைத் தான் காதலுக்கு முன் மாதிரிகளாகச் சித்தரிக்கின்றனர்.

இப்படி இருப்பதை ஊக்குவிக்கின்றனர். அறிவை அடகு வைக்காமல் எப்படி நடக்க வேண்டும் என்ற அறிவுரை கூறாமல் பைத்தியம் பிடித்து அலைவதை ஊக்குவிக்கிறார்கள்.

இந்த நிலைக்கு ஆளானவன் என்ன செய்வான்? என்னை காதலிக்காதவள் யாருக்கும் கிடைக்காது என்று கருதி அந்தப் பெண்ணைக் கொலை செய்கிறான். முகத்தில் ஆசிட் வீசி கோரமாக்குகிறான். அவள் தனக்கு விருப்பமான ஒருவனை மணம் புரிந்து வாழாமல் அவதூறு சொல்கிறான்.

காதல் என்ற பெயரில் மன நோயை ஊக்குவிக்கும் ஊடக நாதாரிகளையும் அறிவு ஜீவிகளையும் நாம் கேட்கிறோம். உங்கள் தங்கையை அல்லது மகளை இப்படி இப்படி ஒருவன் ஒரு தலைப்பட்சமாக காதலித்து அவள் கிடைக்க வில்லை என்றால் அவளைக் கொலை செய்தால், ஆசிட் வீசினால் அவன் கொண்டது ஆழமான காதல் என்பீர்களா? ஊக்குவிப்பீர்களா? ஒருக்காலும் செய்ய மாட்டீர்கள். அப்படியானால் உங்களுக்கு விரும்பாத ஒன்றை மற்றவர் மீது திணிப்பது நியாயமா?

ஒருத்தி ஒருவனை விரும்புகிறாள். அவனும் அவளை விரும்புகிறாள். சில நாட்கள் பழக்கத்தில் அவன் பல பெண்களை ஏமாற்றியவன் என்று அவளுக்குத் தெரிகிறது என்று வைத்துக் கொள்வோம்.

காதல் கொண்டு விட்டேன்; இது தெய்வீகக் காதல்; கண்ணகி போல் காதல் கொண்டு மாதவியின் வீட்டுக்கு அனுப்பி வைப்பது தான் காதலா? அவனை வெட்டி முறித்து விட்டு மறு வாழ்வை அமைப்பது தான் நல்லதா?

ஆண்களிலும் பெண்களிலும் சில காதலர்கள் இருக்கிறார்கள். காதலித்தவன் கை விட்டால் அல்லது காதலிக்க மறுத்தால் அவனையே நினைத்து ஓடாக உருகிவிடுகிறார்கள். இப்படி உருகுவது தான் காதல் என்று நாதாரிகள் போதை ஏற்றி விட்டனர்.

இப்படி நடக்கும் பலரை ஆண்களிலும் பெண்களிலும் நாம் காண்கிறோம். இதற்குப் பெயர் காதலா? மன நோயா? உங்கள் மகனோ மகளோ இப்படி நடைப்பிணமாக ஆகி விட்டால் காதல் தியாகி என்று வரவேற்பீர்களா?

காதல் என்று ஒருவரை ஒருவர் விரும்பினால் அந்த விருப்பம் காலா காலம் நீடிக்க வேண்டும் என்ற பாதுகாப்பு உணர்வு அவசியம். குறிப்பாக பெண்களுக்கு இது அவசியம். ஆண்களில் அதிமானவர்கள் காதல் என்ற பெயரில் திருமணம் செய்யாமலே அந்தப் பெண்ணை அனுபவிப்பவர்களாக உள்ளனர். சலிப்புத் தட்டியவுடன் கை விட்டு ஓடி விடுகின்றனர். இருவரும் இணைந்திருக்கும் ஆபாசக் காட்சிகளைக் காட்டி மிரட்டி அவளை தானும் அனுபவித்து காமுக நண்பர்களுக்கும் விருந்தாக்குகின்றனர்.

இதைத் தான் காதல் என்று ஊக்கப்படுத்துகின்றனர்.

வாலண்டைன் என்ற பாதிரியார் காதலர்களைச் சேர்த்து வைத்தாராம். அதனால் அவர் பெயரால் காதலர் தினம் என்பதை உண்டாக்கி விட்டனர்.

தன் மகனோ மகளோ இந்த நிலைக்கு ஆளாவதை விரும்பாத ஊடக வேடதாரிகள் எல்லாக் கொண்டாட்டங்களிலும் காசு பார்ப்பது போல் இதிலும் காசு பார்க்கும் மாமா வேலையிலும் இறங்கி விடுகிறார்கள்.

காமக் களியாட்டத்தை முக்கியத்துவம் வாய்ந்ததாகச் சித்தரித்து பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கி சமுதாயத்தை ஊடகங்கள் சீரழித்துக் கொண்டு இருக்கின்றன.

கேள் ஃபிரண்ட் இல்லாதவர்களை கோமாளிகள் போல் சித்தரித்து, கேள் ஃபிரண்ட் இல்லாத நல்ல ஒழுக்கம் உள்ள இளைஞர்களை 'அடப்பாவி உனக்கு கேல் ஃபிரண்ட் இல்லையா? அப்ப நீ வேஸ்ட் என்று கூறும் அளவிற்கு காமக் காதலை கவுரவமான விஷயமாக மாற்றி விட்டது.

உங்கள் காதலிக்கு, காதலனுக்கு SMS அனுப்புங்கள்! அதை டிவியில் போடுகின்றோம்; விலை வெறும் ரூ.3, ரூ.6 தான் என இளைஞர்களின் உணர்வுகளைக் காசாக்கி கொண்டிருக்கின்றனர் மீடியாக்கள்.

இதை கிராமங்களில் மாமா வேலை என்பார்கள்.

**இளம் பெண்களே!**

காதல் என்பது ஒரு மாயை, இளம் வயதில் வரும் உணர்வுகளின் வெளிப்பாடு.

பெரும்பாலான காதல்கள் திருமணத்தில் முடிவதில்லை. திருமணத்தில் முடிந்த பெரும்பாலான காதல்கள் பிரச்சனையில் தான் முடிந்துள்ளன.

காதலிக்கும் போது ஒருவரின் நற்குணங்கள் மட்டுமே மற்றவருக்குத் தெரியும். காதலுக்காக எதையும் செய்யத் துணிவார்கள். ஆனால் திருமணத்திற்குப் பிறகு குறைகளும் தெரிய ஆரம்பிக்கும்.

பெற்றோர்களை மீறி திருமணம் செய்திருந்தால் அவர்களின் ஆதரவு இல்லாததால், தன்னைக் காதலித்து திருமணம் செய்து கொண்டவன் என்ன தவறு செய்தாலும் பெரியவர்களிடம் முறையிட முடியாமல் போய்விடும், (காதலன்) கணவன் செய்யும் எல்லாக் கொடுமைகளையும் சகித்துக் கொண்டு வாழ வேண்டிய அவல நிலைக்கு நீங்கள் தள்ளப்படுவீர்கள். இன்று காதலுக்கு துணை நிற்கின்றேன் என்று சொல்லும் நண்பர்கள் எல்லாம் நாளை காணாமல் போய் விடுவார்கள், வாழ்வில் கஷ்டம் மட்டுமே மிஞ்சி இருக்கும்.

இளம் பெண்களே! பெரும்பாலும் காதலிக்கும்

இளைஞர்கள் தங்களுடைய உணர்வுகளுக்கு தீனிபோடவே பெண்களிடம் ஆசை வார்த்தை கூறி காதல் என்னும் மாய வலையில் விழ வைத்து தங்கள் இச்சைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர். இதை அறியாத அப்பாவி இளம் பெண்கள் ஆண்களின் ஆசை வார்த்தையில் மயங்கி தங்களுடைய கற்பைத் தொலைத்து மானம் இழந்து, மரியாதை இழந்து விடுகின்றனர்.

மிகச் சிலர் மட்டுமே இதில் விதிவிலக்கு. ஆனால் உங்களால் காதலிக்கப்படுபவன் அந்த மிகச் சிலரில் உள்ளவனா என்பதை உங்களால் முன்னரே கண்டுபிடிக்க முடியாது.

காதலிக்கும் ஆண்களுக்கு பெரும்பாலும் பாதிப்புகள் ஏற்படுவதில்லை. உங்களுடன் சேர்ந்து எல்லா தவறுகளையும் செய்துவிட்டு அவனால் சமுதாயத்தில் நன்றாக வாழ முடிகின்றது, ஆனால் பெண்களாகிய உங்கள் நிலையை எண்ணிப் பாருங்கள்!

அவன் கைவிட்டால் மறு திருமணம் கடினமாகின்றது. அந்த திருமணமும் மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்களின் உடன் பிறந்த சகோதரிகள் இருந்தால் அவர்களின் திருமண வாழ்வும் கேள்விக்குறியாகும்.

### படிக்கும் இளைஞர்களே!

காதலிக்காக ஒதுக்கும் நேரத்தை உங்கள் படிப்பிற்காக ஒதுக்கினால் அரியர் இல்லாமல் (பெயில் ஆகாமல்) தேர்வில் தேர்ச்சி பெற்று நல்ல வேலையில் அமரலாம். நம்மைக் கஷ்டப்பட்டு படிக்க வைக்கும் பெற்றோர்களைக் காப்பாற்றலாம். தன் பிள்ளை தன்னை வயதான காலத்தில் காப்பாற்றுவான் என கனவுகளுடன் உங்களைப் படிக்க வைக்கும் பெற்றோர்களுக்கு செய்யும் துரோகம் தான் காதல் என்ற பெயரில் உங்கள் நேரத்தையும் வாழ்க்கையையும் வீணடிப்பது.

உங்களுடைய பொருளாதாரத்தை வீணாக்கும் கருவியாகத் தான் காதலிகள் இருக்கின்றனர். காதலியின் சின்ன சிரிப்பிற்காக உங்கள் பெற்றோர்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை வீண் விரயம் செய்ய வேண்டுமா? சிந்தித்துப் பாருங்கள்.

நீங்கள் ஒரு பெண்ணை விரும்பி அந்தப் பெண் உங்களைப் புறக்கணித்தால் நீங்கள் மிகுந்த மன உலைச்சலுக்கு ஆளாவீர்கள் அது எப்போதும் உங்களை சோகத்திலேயே வைத்திருக்கும், வாழ்வில் சந்தோஷம் என்பதே பிறகு இருக்காது. உங்கள் ஆற்றல் அறிவு, கல்வி அனைத்தையும் இழந்து மன நோயாளிகளாக உலா வர வேண்டி இருக்கும்.

தவறான பார்வையையும், சிந்தனையையும், பாலியல் தொடர்பான பேச்சுகளையும் விபச்சாரத்தின் ஒரு பகுதி என்று அகில உலக வழிகாட்டியான நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஒருவர் ஒரு பெண்ணை மணம் முடிக்க விரும்பினால் அந்தப் பெண்ணின் பொறுப்பாளர்களிடம் போய் பேசி, மணம் முடித்துக் கொள்ள வேண்டும்.

மேற்கூறிய அறிவுரைகளைப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதல் கூறி இந்தக் காதல் எனும் சீர்கேட்டில் பிள்ளைகள் விழுந்து விடாமல் பாதுகாக்க வேண்டும்.

ஆனால் மாணவ, மாணவியர் எப்படிக் காதலிக்க வேண்டும் என்ற கேடு கெட்ட கலாச்சாரத்தை டி.வி.க்கள் கற்றுக் கொடுக்கின்ற போது. பெற்றோரும் சேர்ந்து கொண்டு தான் அதைப் பார்க்கின்றனர். விளைவு, பிள்ளைகள் பரீட்சையில் பெயிலாகுவது ஒரு புறமிருக்க யாருடனேனும் ஓடிப் போகும் போது பெற்றோர்கள் அவமானப்பட்டு தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு சென்று விடுகின்றனர்.

பெற்றோர் செய்கின்ற மற்றொரு பெரிய தவறு, தங்கள் பிள்ளைகளுக்கு செல்போன்கள் வாங்கிக் கொடுப்பதாகும். செல்போன் பிள்ளைகளின் ஒழுக்க வாழ்வையும் பாழாக்கிக் கொண்டிருக்கிறது.

பல்வேறு முனைகளில் செல்போன்கள் நமது பிள்ளைகளை ஒழுக்கக் கேட்டிற்கும், சீரழிவிற்கும் இழுத்துச் செல்கின்றன. செல்போன்களில் நடமாடும் பாலியல் வக்கிர, ஆபாச செயல்கள் இளைஞர் மற்றும் இளைஞிகளிடையே இன்றைக்கு சர்வ சாதாரணமாக நடைபெற்று கொண்டிருக்கின்றது.

தங்கு தடையற்ற காதல் பேச்சுகள் இந்த செல்போன்களில் தான் நடைபெறுகின்றது:

எந்த ஓர் ஆணும், பெண்ணும் நேரில் சந்திக்கும் போது, அவர்களது வெட்க உணர்வுகள் அவர்களிடமிருந்து வார்த்தைகள் வெளிவருவதைத் தடுத்து விடும். அத்துடன் சமுதாயத்தின் கழுகுப் பார்வைகள், சமூகக் கட்டுப்பாடுகள் பெரிய திரைகளாக நின்று, பெரும் தீமைகள் நடைபெறாமல் காக்கின்றன.

ஆனால் இந்த வெட்கத் தடைகளையும், சமூகத் தடைகளையும் செல்போன்கள் தகர்த்தெறிந்து, தங்கு தடையற்ற செக்ஸ் பேச்சுகளைப் பரிமாற்றம் செய்வதற்குத் துணை புரிகின்றன. வாலிப வயது ஆண், பெண் இரு பாலரும் செல்போன்களை செக்ஸ் போன்களாகத் தான் பயன்படுத்துகின்றனர்.

இந்தக் காதல் எனும் சீர்கேட்டால் சமூகத்தின் ஒழுக்கம் எனும் கட்டமைப்பே சீர்குலைந்து விட்டது. எந்த அளவுக்கென்றால் திருமணத்திற்கு முன் இப்போதெல்லாம் பெண்களுக்கு கன்னி பரிசோதனை (virgin test) நடத்தப்படுகின்றது. இந்த காதல் சமூகத்தில் அவ்வளவு ஒழுக்க சீர்கேட்டைக் கொண்டு வந்துள்ளது.

இந்தக் காதலினால் ஒழுக்க கேடான விஷயங்கள் ஒரு புறமிருக்க இதையெல்லாம் மிஞ்சும் அளவிற்கு இந்த காதல் என்ற சீர் கேட்டால் எத்தனை உயிர்கள் பறிபோகின்றது. தன்னை பெற்றத் தாய் வளர்த்த தந்தை தன்னை நேசிக்கவில்லை என எந்த ஒரு இளைஞனும் தற்கொலை செய்து கொண்டுள்ளானா?

ஆனால் காதலி நேசிக்காததால் காதலன் தற்கொலை என்ற செய்தியை நிறைய கேள்விப்பட்டிருப்போம். மகள் அல்லது மகன் ஓடிப்போய் விட்டதால் பெற்றோர்கள் அவமானத்தில் தற்கொலை செய்கின்றனர்.

பிள்ளைகளை ஒழுக்கத்துடன் ஒழுங்காக வளர்த்திருந்தால் இந்த அவல நிலை பெற்றோர்களுக்கு ஏற்படுமா? வீட்டில் காதலுக்கு சம்மதிக்காததால் காதல் ஜோடி தற்கொலை! இந்தச் செய்தியும் பத்திரிக்கைகளில் அதிகம் பார்த்திருப்பீர்கள்.

ஆரம்பத்திலேயே காதல் சீர்கேட்டை பிள்ளைகளுக்குப் புரிய வைத்திருந்தால் பிள்ளைகளைப் பறிகொடுக்கும் அவல நிலை பெற்றோர்களுக்கு ஏற்படுமா?

தன் காதலியை காதலித்தவனை ஆத்திரத்தில் கொலை செய்த காதலன். அல்லது இன்னொருத்தனை காதலித்ததால் காதலியை கொன்ற காதலன். இந்தச் செய்தியைப் பத்திரிக்கைகளில் பார்த்திருப்பீர்கள்.

இதில் கள்ளக் காதல் வேறு! அதில் ''கள்ளக் காதலன் கொலை'' அல்லது ''கள்ளக் காதலி கொலை'' என்று உயிர்ப் பலி இதை விட அதிகம் என்பது பத்திரிக்கை படிப்பவர்களுக்குத் தெரியும்.

எவன் செத்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை; எங்களுக்குப் பணம் தான் முக்கியம் என்று மீடியாக்கள் கொஞ்சம் கூட சமுதாய அக்கரை இல்லாமல் செயல்பட்டு இந்தக் காதலை ஊக்கப்படுத்திக் கொண்டிருப்பதினால் தான்.

இப்படி காதலை ஆதரிப்பவர்களிடம் போய் 'சார் நான் உங்க பொன்ன லவ் பன்னிக்கவா?' என்று கேட்டால் ''டேய்! உன்ன ஈவ்டிசிங்ல போலிஸ்ல புடுச்சு கொடுத்துடுவேன்'' என்று தான் கூறுவார்கள்.

ஒரு பெண்ணைக் காதலிக்கும் இளைஞன் தான், தன் அக்காவையோ அல்லது தங்கையையோ யாரேனும் காதலித்தால் முதலில் சண்டைக்குப் போவான்.

அடுத்தவன் பிள்ளை நாசமா போனா பரவா யில்லை உன் அக்கா தங்கை நாசமாகிவிடக் கூடாது என்று சுய நலத்தோடு யோசிக்கும் இளைஞர்களே சமுதாய அக்கரையோடு நடந்து கொள்ளுங்கள்!

டிசம்பர் 1 ஆம் தேதிக்குக் காரணமே பிப்ரவரி 14 ஆம் தேதி தான்.

எய்ட்ஸ் எனும் உயிர்க் கொல்லி நோயை ஒழிக்க டிசம்பர் 1 உலக எய்ட்ஸ் நாளாக அனுசரிக்கப்படுகின்றது. எயிட்ஸ் நோய் வரக் காரணமாய் இருக்கும் காமக் களியாட்டங்களை (காதலை) அங்கீகரிக்கும் இந்த காதலர் தினமும் உலக எயிட்ஸ் தினமும் ஒன்றே. எயிட்ஸ் நோய் போன்ற கொடிய நோய்கள் பரவ இது போன்ற காம களியாட்டங்களை அரங்கேற்றும் விழாக்கள் முதல் நிலை காரணிகளாய் இருக்கின்றன.

எயிட்ஸ் நோய் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் அரசு எயிட்ஸ் நோய் வர காரணமாய் இருக்கும் இந்தக் காமக் களியாட்டத்திற்கு எதிராகவும் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்ய வேண்டும்.

சமுதாய அக்கரையுள்ள இளைஞர்களும், பிள்ளைகள் ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர்களும் இந்த பிப்ரவரி 14ஐ புறக்கணித்தால் உயிர்ப் பலிகளும் சமூக சீர்கேடுகளும் அசிங்கங்களும் மற்றும் திருமணத்திற்கு முன்பே கற்பு பறிபோகும் நிலையும் ஏற்படாமல் நமது சமுதாயத்தைக் காப்பாற்றலாம்!

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்